20.11.2025

Crl.M.P.No.353/2025.

**மனுதாரர் கே.பொன்னுசாமி த/பெ.காத்தவராயன் என்பவரது வாக்குமூலம்.**

நான் தேசூரில் குடியிருந்து வருகிறேன். நான் தொழிற்சாலையில் மெக்கானிக்காக பணிபுரிந்து வருகிறேன். 29.12.2024ம் தேதி மாலை 4.30 மணி அளவில் எனது அம்மாவின் பெரியப்பாவின் அண்ணன் மகன் காசி, அவரது மனைவி காமாட்சி ஆகிய இருவரும் ஒரு வருடத்திற்கு முன்பு என்னை மடக்கி அடித்தார்கள். அது சம்மந்தமாக நான் தேசூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன். புகாரின்பேரில் போலிசார் அழைத்து விசாரணை செய்தனர் பின்பு சமாதானம் ஏற்பட்டுவிட்டது. அதன் பிறகு 6 மாதம் கழித்து காசி மகன் பிரகாஷ் என்பவர் என்னை மீண்டும் அடித்தார் அது சம்மந்தமாக புகார் கொடுத்திருந்தேன். அதன் பின்னர் அவரது குடும்பத்தினர் மற்றும் பிரகாஷ் இனிமேல் பிரச்சனை செய்யமாட்டோம் என்று காவல் நிலையத்தில் எழுதி கொடுத்ததன்பேரில் சமாதானம் ஏற்பட்டது. மேற்பட்ட சமாதானத்தின்படி நான் பிரகாஷ் என்பவருக்கு போன் செய்து பேசியபடி என்றைக்கு நிலம் எழுதி தருகிறீர்கள் என்று கேட்டேன். 29.12.2024ம் தேதி ஞாயிற்று கிழமை வருவதாக கூறினார் அதன்படி அன்று 4.30 மணிக்கு நான் பணிபுரியும் தேசூர் மடம் ரோட்டில் உள்ள எனது தொழிற்கூடத்திற்கு பிரகாஷ், பிரபாகர், சத்தீஷ், காமாட்சி ஆகியோர் வந்தார்கள். நாங்கள் நிலம் எழுதி கொடுக்க முடியாது என்று சொல்லி தகராறு செய்தனர். சதீஷ் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தில் கத்தி வைத்திருந்தார். பிகாஷ் மற்றும் பிரசாந்த் என்பவர்கள் என் தொழிற்கூடத்தில் இருந்த இரும்பு ராடை எடுத்து என்னை அடிக்க வந்தார்கள். மேலும் காமாட்சி என்பவர் மஞ்சம்பட்டு கிராமத்திற்கு வந்தால் என்னை வெட்டி புதைத்துவிடுவேன் என்று என்னை மிரட்டினார். அதனால் நான் அன்றையிலிருந்து எனது மஞ்சம்பட்டு வீட்டிற்கு செல்வதில்லை. இதுசம்மந்தமாக நான் அன்றையதினம் மாலை 5.00 மணி அளவில் தேசூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலிசார் மனு ரசீது கொடுத்தார்கள். அதன் பிறகு நான் பலமுறை சென்று கேட்டும் என் புகாரின்மீது எந்தவித நடவடிக்கையும் போலிசார் எடுக்கவில்லை. அதன் பின்பு மாவட்ட துணை கண்காணிப்பாளர், மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கும் புகார் கொடுத்தேன். அவர்களும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அதனால் இம்மனுவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் அதனால் எதிரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.